(ஊ) இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணமளித்து பொருத்தமான அதிகாரிகளுக்கு உதவியளித்தல் ;

(எ) தேசத்தில் குறைந்த வரப்பிரசாதம் பெறுவோரின் கல்வி, ஆரோக்கியம், பொருளாதார நிலைமைகளை மேம்படுத்த பிரத்தியேக, பொது, அரச சார்பற்றதான பொருத்தமான அதிகாரிகளுக்கு உதவியளித்தல் ;

(ஏ) வரப்பிரசாதம் பெறாத குறைந்த வசதி கொண்ட மாண வர்களுக்கு பொருளாதார ஏனைய உதவிகளை வழங்க பொருத்தமான அதிகாரிகளுக்கு உதவியளித்தல் ;

(ஐ) குறைந்த வசதி கொண்ட மாணவர்களுக்காக தொழில், தொழில்நுட்ப கல்வி நிலையங்களை தாபிக்க அல்லது நடத்த பொருத்தமான அதிகாரிகளுக்கு உதவியளித்து பாடத்தொடர்களை பூர்த்திசெய்ய அவர்களுக்கு உதவுதல் ;

(ஒ) ஊனமுற்ற, ஆதரவற்ற பிள்ளைகளுக்கு அன்பை வளர்த்து பாதுகாப்பையும் மறைவையும் அளிக்கும் ஸ்தாபனங்களை தாபித்து நடத்த பொருத்தமான அதிகாரிகளுக்கு உதவியளித்தல் ;

(ஓ) ஒரு சுகாதாரமான வாழ்க்கைமுறைக்கான சுத்தமான சுற்றாடலை ஊக்குவிக்க பொருத்தமான அதிகாரிகளுக்கு உதவியளித்தல் ;

(ஔ) குறைந்த வசதி கொண்டவர்களுக்கும் தொழில் இல்லாதோருக்கும் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த தொழில் பெறச்செய்ய உதவிகளையும் தருணங்களையும் வழங்குவதன்மூலம் தேசத்தில் நிலையான அபிவிருத்தியை ஊக்குவிக்க பொருத்தமான அதிகாரிகளுக்கு உதவியளித்தல் ;

